# முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றிற்கான தீர்வுகளும்: சம்மாந்துறை கல்வி கோட்டத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

M.M.S. Hajara[1] & M.U.F. Rifka[2]

*[1&2] Department of Economics and Statistics, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka*

*[1] hajara@seu.ac.lk, [2] rifka0966@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகளாவிய ரீதியில் பெண்ணிலைவாதம், பெண் விடுதலை போராட்டம் போன்ற கருத்துக்கள் வளர்ந்து கொண்டிருக்கும் வேளையில் பெண் கல்வியின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டுக் கொண்டே வருகின்றன. மேலும் உலக நாடுகளில் பெண்கள் பல்வேறு உயர் தொழிலை ஆற்றுபவர்களாகவும் பல நாடுகளின் தலைவிகளாகவும் காணப்பட்டு வந்தாலும் கூட கல்வி கற்பதில் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். அதிலும் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணும் நோக்கில் சம்மாந்துறை கல்வி கோட்டத்திற்குட்பட்ட 5 பிரதான பாடசாலைகள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக முதலாம்நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதலாம்நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்பு ஆகிய முறையும் இரண்டாம்நிலைத் தரவுகளாக நூல்கள், பாடசாலை புள்ளிவிபர திரட்டு அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. இதன் ஊடாக கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் வறுமை, பெற்றோர்களின் கல்விநிலை, பாடசாலை கல்வியில் திருப்தியின்மை, பகுதிநேர வகுப்புகளிற்கு செல்வதில் இடையூறுகளை எதிர்கொள்ளல், இளவயது திருமணம், ஆங்கில மற்றும் தொழிநுட்ப அறிவில் பின்தங்கிய நிலை, தொழிற் சந்தையில் உள்நுழைவதில் சிக்கல்கள் போன்ற சவால்கள் இனங்காணப்பட்டன. வறுமை நிலையில் காணப்படும் குடும்பங்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல், மாணவர்களுக்கு கல்வி மீதான ஆர்வத்தை அதிகரித்தல், இளவயது திருமணம் பற்றிய விளிப்பூட்டல்களை வழங்குதல் போன்றவற்றையும் பரிந்துரைகளாக குறிப்பிடலாம். இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்கொள்ளும் சவால்களை குறைப்பதற்கும். பொருளாதார மற்றும் சமூக ரீதியில் மேலோங்கச் செய்வதற்கும் இவ் ஆய்வானது முக்கிய களமாக அமைந்துள்ளது.*

***திறவுச் சொற்கள் :*** *பெண்கல்வி, சவால்கள்*

---

## *1. அறிமுகம்*

*உலக நாடுகளில் கல்வி என்பது மனிதர்களின் மூச்சாகக் காணப்படுகின்றது. கல்விக்காக தமது வாழ்நாள் முழுவதையுமே செலவு செய்வதோடு தமது அறிவினையும் விருத்தி செய்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பெண் என்பவள் குடும்பத்தைக் கவனித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல், வீட்டை நிர்வகித்தல் போன்ற பல்வேறு பணிகளை கஷ்டங்களினால் பெற்ற அனுபவத்தின் மூலம் குடும்பத்தினைச் சிறப்பானதாகக் கொண்டு செல்கின்றனர். இன்று பெண் கல்வியானது ஒரு காத்திரமான அறிவுத் தளத்தில் பேசப்படுகின்றது.*

*'ஒரு ஆண் கற்பதால் அவன் மட்டுமே கற்கிறான் மாறாக ஒரு பெண் கற்கும் போது மொத்த சமூகமே கற்கிறது' எனலாம். மேலும் இலங்கையில் பெண்கல்வியானது ஏனைய தென்னாசிய நாடுகளை விட முன்னேறியுள்ளது என்பது சுகாதாரத்திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சமுதாயம் எப்படி முன்னேற்றமடைகின்றது என்பதனை அந்நாட்டில் பெண்களின் கல்வியும் அக் கல்வி மூலம் பெண்கள் சமூகத்திற்கு செய்கின்ற பணிகளையும் வைத்து தெளிவடையலாம். பெண்களின் மனநிலைக்கும் அவர்களின் திறமைகளுக்கும் முதன்மையளிக்க வேண்டியது ஒவ்வொரு குடும்பத்தினதும் கடமையாகும்.*
*இலங்கையின் மொத்த தொழிலாளர்களில் 38% ஆனோர் பெண்களாவர். எனினும் 8% வீதத்திற்கும் குறைவான பெண்களே உயர் பதவிகளை வகிக்கின்றனர். சமூக வலுவூட்டல் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு ஆங்காங்கே சில காணப்பட்டாலும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் இன்னும் அவை சரியாக வெளிக்கொணரப்படவில்லை. அதற்கான சாதகமான சமூக சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். மலேசியா, இந்தோனேசியா மற்றும் மேற்கத்தைய நாடுகளில் முஸ்லிம் பெண்கள் பலர் பல்வேறு துறைகளிலும் உயர் நிலையில் பிரகாசித்துகொண்டிருக்கும் இக்காலத்தில், இலங்கையில் பெண்களின் வகிபாகத்தையே கேள்விக்குட்படுத்தும் போக்கு இன்னும் எமது சமூகத்தை பின்னோக்கி நகர்த்துமே தவிர, பெண்களின் கல்வி ரீதியான உயர் அடைவுகள் வெறும் சான்றிதழ்களுடன் குறுகிவிடக்கூடிய அபாயத்தையே நாம் எதிர்கொள்வோம். இவ்வகையில் ஆய்வு பிரதேசமாகிய சம்மாந்துரை கல்வி கோட்டத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். அவற்றை கண்டறிந்து அதற்கான முன்மொழிவுகளை முன்வைத்தல் இவ் ஆய்வினூடாக எதிர்பார்க்கப்படுகிறது.*

***2. ஆய்வுப் பிரச்சினை***

*முஸ்லிம் பெண்கள் கல்வியில் ஓரளவு நல்ல நிலையில் காணப்பட்டாலும் மறைமுகமாகவும் நேரடியாகவும் பல்வேறு வகையான இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். அந்தவகையில் ஆய்வுப்பிரதேசமாகிய சம்மாந்துறை கல்வி வலயத்தில் இப்பிரச்சினை தற்காலத்தில் அதிகரித்த வண்ணம் உள்ளன. ஆகவே தான் ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களையும் அச்சவால்கள் தொடர்பான பரிந்துரைகளையும் முன்வைப்பதாக இவ் ஆய்வுப் பிரச்சினை இடம்பெற்றுள்ளது.*

***3. ஆய்வு நோக்கம்***

*3.1 பிரதான நோக்கம்*

- *சம்மாந்துறை கல்வி கோட்டத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல்.*

*3.2 துணை நோக்கம்*

- *சவால்களுக்கான பின்னணியை அறிந்து கொள்ளுதல்.*
- *சவால்களை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.*

***4. ஆய்வின் முக்கியத்தும்***

*பெண் என்பவள் ஒரு முழுமையான வட்டம் போன்றவள். படைப்பதற்கான ஊட்டமளிப்பதற்கான மாற்றியளிப்பதற்கான ஆற்றல் அவளுக்குள் பொதிந்துள்ளது (டியானி மேரிசைல்ட்). இத்தகைய பெண்ணானவள் கல்வி கற்கும் போது எதிர்நோக்கும் சவால்களை கண்டறிந்து அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இவ்வாய்வின் முக்கியத்துவமாகும். மேலும் இவ்வாய்வானது பெண்களின் கல்வி நிலையில் உச்சநிலையை அடைவதற்கும் வழிகாட்டுவதாக அமையும்.*

***5. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பு நுட்பங்களும்***

*ஆய்வினை திறம்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ் ஆய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.*

***5.1 முதலாம் நிலைத் தரவுகள்***

*வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு ஆகிய முறைகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன.*

- ***வினாக்கொத்து முறை***

*சம்மாந்துறை கல்வி கோட்டத்திற்குற்பட்ட பாடசாலைகளில் உயர்தரம் கற்கும் மாணவிகள் உள்ள பிரதான 5 பாடசாலை மாணவிகளுக்கு எழுமாறாக 100 வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு அதில் 79 கிடைக்கப்பெற்றன.*

அட்டவணை 1: பாடசாலை விபரம்

| **பாடசாலை** | **மாணவிகளின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட வினாக்கொத்துகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| கமு/சது/முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் | 178 | 53 |
| கமு/சது/அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி | 103 | 33 |
| கமு/சது/தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம் | 23 | 7 |
| கமு/சது/அல் அர்ஷத் மகா வித்தியாலயம் | 15 | 5 |
| கமு/சது/சென்னல் சாஹிரா மகா வித்தியாலயம் | 6 | 2 |
| மொத்தம் | 325 | 100 |


ISBN: 978-624-5736-55-3

- **நேர்காணல் முறை**

சம்மாந்துறை பிரதேசத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் சிலரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 2: தொழில் வகை

| தொழில் வகை | எண்ணிக்கை |
|---|---|
| அதிபர் | 1 |
| ஆசிரியர்கள் | 5 |
| வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் | 3 |
| மகளிர் சங்க தலைவி | 1 |
| மொத்தம் | 10 |

***5.2 இரண்டாம் நிலைத் தரவுகள்***

*இரண்டாம் நிலைத் தரவுகளானவை ஆய்வுக்கு வலிமை சேர்க்கும் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த வகையில் நூல்கள், பாடசாலை புள்ளிவிபர திரட்டு அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.*

*மேலும் இவ்வாய்விற்கான தரவுகளானது விவரணப் புள்ளிவிபரவியலை அடிப்படையாக கொண்டு பண்பு ரீதியான அளவு ரீதியான தரவுகள் கையாளப்பட்டுள்ளன.*

***6. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்***

*பெண்கள் நாட்டின் கண்கள் எனும் வாசகத்திற்கு ஏற்ப நாட்டின் பல்வேறு துறைகளிலும் பெண்களின் தலையீடு இன்றியமையாததாக காணப்படும். இக்கால கட்டத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் ஒரு சில இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது. அந்தவகையில் ஆய்வு பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கண்டறியப்பட்ட முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களாவன,*

***1. வறுமை***

*தற்காலத்தில் வறுமையானது முஸ்லிம்கள் மத்தியில் ஒரு பரந்துபட்ட நிலையில் காணப்படுகிறது. அதாவது 70 வீதமான முஸ்லிம்கள் வறுமை கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றார்கள். வறுமையானது கல்வி வளர்ச்சியில் நேரடியாக தாக்கம் செலுத்தும் காரணியாக காணப்படுவதனால் முஸ்லிம் பெண்களின் கல்வியிலும் வீழ்ச்சி ஏற்படுவதற்கு வறுமையானது காரணமாக அமைகிறது. இந்த வகையில் இவ் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் முஸ்லிம் பெண்களில் பெரும்பாலானோரின் பெற்றோர் விவசாயத்தை பிரதான ஜீவனோபாயமாக கொண்டு காணப்படுவதனால் இங்கு வறுமையின் உச்ச நிலையிலும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கம் செலுத்துவதனால் பெண் பிள்ளைகள் தங்களது கல்வியை தொடர முடியாத நிலைக்கு ஆளாகின்றனர்.*


ISBN: 978-624-5736-55-3

***2. பெற்றோரின் கல்வி நிலை***

*பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோரின் கல்வி நிலையும் செல்வாக்கு செலுத்தும் ஒரு காரணியாகும். பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் கல்வி கற்ற குடும்பங்களில் பெண் பிள்ளைகளின் கல்விக்கான ஊக்குவிப்பு அதிகமாக காணப்படும் இவ் ஆய்வு பிரதேசத்தில் உள்ள பெற்றோர்களில் சிலர் எழுத வாசிக்க தெரியாததால் பலவேறுபட்ட இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றனர். இதனால் இவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் உணராத நிலையில் தங்களது பிள்ளைகளின் கல்வியை பாதியில் நிறுத்துவதற்கு உந்துதலாக அமைகின்றனர்.*

***3. பாடசாலைக் கல்வியில் திருப்தியின்மை***

*பாடசாலைகளின் காணப்படும் ஆசிரியர்களின் கவனயீனம், தகுதியான ஆசிரியர் பற்றாக்குறை, பொருத்தமான பாடத் தெரிவுகளை தெரிவு செய்வதில் இடையூறுகள், பாடசாலைகளில் அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் ஆய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் தங்களது பாடசாலை கல்வியை இடைநிறுத்துகின்ற நிலையில் காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் பாடசாலை கல்வியில் திருப்தி என்பது மிகவும் குறைந்த அளவிலே காணப்படுகின்றது.*

***4. பகுதிநேர வகுப்புகளுக்குச் செல்வதில் இடையூறுகளை எதிர்நோக்கல்***

*இவ் ஆய்வு பிரதேச மாணவிகள் பகுதிநேர வகுப்புக்களில் உயர்தர கல்வியை மேற்கொள்வதற்காக பல கிலோமீற்றர்கள் பயணம் செல்ல வேண்டி உள்ளது. குடும்பத்தின் பொருளாதார சுமை காரணமாக வெகுதூரம் நடந்து செல்வது கல்வியில் ஒரு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிலையில் உள்ளது. மேலும் பகுதிநேர வகுப்புகளிற்கு செல்லும் வேளையில் ஆண் மாணவர்களின் அட்டகாசங்கள், வீதி விபத்துக்கள், போதிய போக்குவரத்து வசதிகள் இன்மை என்பனவும் பாரிய சவால்களாக இப்பிரதேச பெண் மாணவிகள் எதிர்நோக்குகின்றனர்.*

***5. இளவயது திருமணம்***

*முஸ்லிம்களின் திருமண வயது ஒரு சர்ச்சைக்குரிய நிலையில் காணப்படுவதனால் முஸ்லிம் பெண்கள் மிகவும் இளவயதிலேயே திருமண பந்தத்தில் இணைகின்றனர். இதனையடுத்து குடும்பசுமை காரணமாகவும் கல்வியினை இடைநிறுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இவ் ஆய்வு பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களில் காணப்படும் பெண்கள் பல்வேறு சமூக பொருளாதார காரணிகளினால் இளவயது திருமணத்தினை மேற்கொள்வதற்காக தங்களது பாடசாலை கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ளனர். இந்நிலையும் ஒரு பாரிய சவாலாக இப்பிரதேச முஸ்லிம்களின் கல்வி நிலையில் காணப்படுகின்றது.*

***6. ஆங்கிலம், தொழிநுட்ப அறிவில் பின்தங்கிய நிலை***

*கொவிட் - 19 இற்கு பிற்பட்ட காலங்களில் பாடசாலை கல்வியானது நிகழ்நிலை மூலமாக நடைபெற்று வந்துள்ள நிலையில் மாணவர்களுக்கு அத்தகைய தொழிநுட்ப சாதனங்களை கையாள்வதில் சிக்கல்கள், அடிப்படை ஆங்கில அறிவில் பின்தங்கிய நிலை, தொழிநுட்ப*

*சாதனங்களை பெற்று கொள்வதில் சிக்கல்கள் காரணமாகவும் இப்பிரதேச மாணவிகள் தங்களது கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது.*

***7. தொழிற்சந்தையில் உள்நுழைவதில் காணப்படும் சிக்கல்கள்***

*இப்பிரதேச பெண் மாணவிகள் பெரும்பாலும் கலைத்துறையில் உயர்தரம் கற்பவர்களாகவே உள்ளனர். இதனால் இவர்கள் கற்கும் பாடத் துறைகளுக்கும் தொழிற்சந்தையில் காணப்படும் கேள்விகளுக்கும் இடையில் பாரிய வேறுபாட்டினை காணக்கூடியதாக உள்ள நிலையில் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்தும் பல வருடங்கள் தொழிலுக்காக காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் இவர்கள் கல்வியில் காட்டக்கூடிய ஆர்வம் குறைவடைந்து இயல்பாகவே கல்வியை இடைநிறுது;தும் நிலை ஏற்கடுவதும் ஒரு சவாலாக இப்பிரதேசத்தில் இனங்காணக்கூடியதாக உள்ளது.*

*ஆய்வு பிரதேசத்தில் அவ்வாறான சவால்கள் இனங்காணப்பட்ட அதேவேளை அதற்கான பின்னணியையும் அறிந்து கொள்ள ஆய்வாளனால் முயற்சிக்கப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பின்னணிக் காரணங்களாக,*

- *மூடநம்பிக்கைகள்*
- *வறுமை*
- *பெண்கள் மீதான சமூகத்தின் தவறான பார்வை*
- *பாடசாலை கல்வியில் வினைத்திறன் குறைவு*
- *கற்பித்தலில் ஆசிரியர் மற்றும் மாணவர் இடைத்தொடர்பு குறைவாக காணப்படல்*
- *மாணவர்களுக்கான உயர்கல்வி பற்றிய போதிய விழிப்புணர்வின்மை*
- *அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத நிலை*
- *கல்வியில் போதிய ஆர்வமின்மை*

***7. ஆய்வின் பரிந்துரைகள்***

*முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்கள் ஓர் நேர்க்கணியமாகவே காணப்படுகின்றது. பெண் கல்வியில் பல்வேறு முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ள போதும் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.*

*ஆகவே இவ் ஆய்வின் கீழ்வரும் பரிந்துரைகளானது இவ்வாய்வு பிரதேச முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்குகின்ற சவால்களை தீர்க்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது.*

- *வறுமை நிலையில் உள்ள குடும்பங்களில் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு வறுமை நிலையானது குறைக்கப்பட வேண்டும்.*

- *மாணவர்களிடத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் வழங்கப்பட்டு கல்வி கற்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் பெற்றோர்களிடத்தில் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.*

- *பாடசாலை கல்வியில் மாணவர்கள் திருப்திபடும் வகையில் ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.*


ISBN: 978-624-5736-55-3

• *பாடசாலைகளில் காணப்படும் அடிப்படை வசதிக்கான பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.*

• *பகுதிநேர வகுப்புகளிற்கு செல்வதற்கு பதிலாக பாடசாலை கல்வியில் திறமை வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து தரமான கல்வியை வழங்க வேண்டும்;.*

• *இளவயது திருமணம் பற்றிய விழிப்புணர்வூட்டல்களையும் அதனால் மாணவிகள் பிற்காலத்தில் எதிர்கொள்ளும் இன்னல்கள் பற்றி சமூகத்திற்கு தெளிவூட்டல்.*

• *ஆங்கில, தொழிநுட்ப அறிவை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்*

• *பாடசாலை கல்வியில் தொழிற் சந்தைகளுக்கு ஏற்றவாறான பாடநெறிகளை கற்பித்து முஸ்லிம் மாணவிகளையும் தொழிற்சந்தையில் நுழைவித்தல்.*

• *நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெண் கல்வியின் முக்கியத்துவத்தையும் தொழிற் பங்கேற்பில் பெண்களின் முக்கியத்துவத்தையும் முஸ்லிம் பெண்கள் மத்தியில் எடுத்துரைத்தல்.*

### *8. முடிவுரை*

*இவ் ஆய்வானது முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களை சம்மாந்துறை கல்வி வலயத்தை மையப்படுத்தி அமைந்துள்ளது. தற்காலத்தில் பெண் கல்வியில் பல்வேறுவகையான முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தாலும் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் பல்வேறு வகையான சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆகவே இவ் ஆய்வானது முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் எதிர்நோக்கும் சவால்களையும் அவற்றை இழிவுபடுத்துவதற்கான பரிந்துரைகளையும் கொண்டு இடம்பெற்றுள்ளது. மேலும் ஆய்வு பிரதேசத்தில் வறுமை, இளவயது திருமணம், பாடசாலை கல்வியில் திருப்தியின்மை என்பன பாரிய சவால்களான இனங்காணப்பட்டுள்ளது. எனவேதான் இவ்வகையான சவால்களை நிவர்த்தி செய்வதில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் முக்கிய இடம் பெறுவதோடு வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த பாடசாலைகளில் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்தல், பெண் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து இதனால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி எவ்வகையில் உந்துதலாக அமையும் என்பதனையும் பற்றிய விழிப்புணர்வகளையும் ஊட்டுவது இன்றியமையாததாகும்.*

### ***உசாத்துணைகள்***

Ashraff. Y. (2019). Personal problem faced by Muslim girls in higher education. Retrieved from:https://www.researchgate.net/publication/339302682_Personal_problems_faced_by_Muslim_girls_in_higher_education. Accessed on: 2022.06.01

Brookfied. M.(2013). The impacts of education: A case study of Muslim women in Ngaoundere Cameron. Retrieved from: https://digitalcollections.sit.edu/isp_collection/1729 Accessed on: 2022.06.01


ISBN: 978-624-5736-55-3

Ilyas. S.U. (2020). The Challenges faced by muslim female education and the way forward. Retrieved from: http://www.ipedr.com/vol73/018-ICWIS2014_A20002.pdf Accessed on: 2022.06.01

Saikia, R. (2022). Problems of rural and urban muslim girls in higher education. Retrieved *from: https://www.journalppw.com Accessed on: 2022.06.03*

*பெண்கல்வியும் சமுதாய முன்னேற்றமும்.* (2018) Retrieved from: http://www.battinews.com/2018/11/blog-post_129.html?m=1 Accessed on: 2022.06.01